**நாரம்மல பிரதேச சபை - 2023**

**----------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாரம்மல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாரம்மல பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம், முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி 05 நிலையான சொத்துக்களிற்குரிய ரூபா 28,356,503 பெறுமதி மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் களஞ்சியத்திலிருந்து விநியோகப் பெறுமதி ரூபா 6,093,053 தொகை களஞ்சியக் கணக்கிற்கு செலவு வைக்காத காரணத்தால் களஞ்சிய மீதி கூடுதலாக மற்றும் வழங்கல் உபகரண செலவுகள் மீதி அப் பெறுமதியால் குறைத்தும் கணக்கீடு செய்யப்பபட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி கடையறைகளில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 37,125 தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | சரியாக கணக்கு வைக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி சபைக்குரியதாக முடிவடையாத 04 | - மேற்படி - | எதிர்பாரா பொறுப்புக்கள் |

| | | |
|---|---|---|
| வழக்குகள் காணப்பட்டதுடன் அதற்காக ரூபா 29,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களில் இந்த வழக்குகள் தொடர்பாக வெளிப்படுத்தி இருக்கவில்லை. | | நிதிக்கூற்றுக்களில வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 05 கணக்கு விடய மீதிககளின் கூட்டுத் தொகை மற்றும் குறித்த அட்டவணைகளின் கூட்டுத் தொகைக்கு இடையே ரூபா 458,306 ஆன வித்தியாசம் ஆனது. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சரியாக உறுதி செய்து கொள்ளாத பெறுமதி ரூபா 7,062,262 ஆன காணி மற்றும் கட்டிடக் கணக்கு மற்றும் மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமானத்திலிருந்து பங்களிக்கும் கணக்கிலிருந்து 31 ஆம் ஜர்னல் குறிப்பு மூலம் அகற்றப்பட்டிருந்தன. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | பெறுமதி ரூபா 8,691,018 ஆன காலாவதியான 514 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2018 சனவரி 24 திகதிய இலக்கம் 02/2018 கொண்ட பொது நிருவாக சுற்றறக்கை | | | |
| (i) | 6.3 பிரிவு | பதவியின் ஒவ்வொறு மட்டத்திற்குமாக ஆழுமை இலக்கை பூர்த்தி செய்வதனை உத்தேசித்திருந்த போதும் அதன் பக்கம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும் |
| (ii) | 6.5 பிரிவு | மனிதவள அபிவிருத்தி திட்டத்தை இற்றைப்படுத்தலை குறைந்த பட்சம் 02 ஆண்டுகளிற்கு ஒரு முறை செய்ய வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும் |
| (இ) | 1988 பிரதேச சபை (நிதி மற்று நிருவாக) விதி | | | |
| (i) | 33 விதி | வீதவரி செலுத்துவதனை புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பான பட்டியல் மற்றும் ஆதன தடை செய்யும் பிடியாணை ஒவ்வொறு காலாண்டு முடிவிலும் வீதவரி எழுதுனரால் தயாரித்து அதனை தவிசாளரின் கையொப்பத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | குறித்த விதி அறிவுரை பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | 59 விதி | கைத்தொழில் பற்றிய பட்டியலொன்றை தயாரித்து அப் பட்டியலை ஒவ்வொறு ஆண்டும் மார்ச் 31 திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளரிற்கு சமர்பிக்க வேண்டிய போதும், 2023 ஆண்டிற்கு அவ்வாறு செய்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | குறித்த விதி அறிவுரை பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (iii) | 61 விதி | வருடாந்த கணிப்பீடொன்றை மேற்கொண்டு பெற்றுக் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொள்ளும் பட்டியலில் உள்ளடங்கும் அனைத்து கைத்தொழில்களையும், கைத்தொழல் வரி மீதான பதிவேட்டில் உள்ளடக்க வேண்டிய போதும், கட்டணம் செலுத்தும் வியாபாரங்களை மாத்திரம் பதிவேட்டில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வரி செலுத்தாத கைத்தொழல்கள் பற்றி பதிவேடுகளில் உள்ளடக்கப்படாததுடன் அது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (iv) | 218 விதி | விதி பிரகாரம் நியமிக்கப்படும் சபை ஒன்றினால் வருடாந்த காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டிய போதும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 38,623,618 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,131,722 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

சேயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| வருமான மூலம் | 2023 ஆண்டு | | | | 2022 ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர்31 இல் மொத்த நிலுவை (பட்டியலிட்ட வருமானத்தில்) | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை (பட்டியலிட்ட வருமானத்தில்) |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரி மற்றும் வரி | 11,753 | 11,763 | 11,763 | 2,583 | 12,796 | 17,790 | 12,159 | 5,631 |
| வாடகை | 19,520 | 27,657 | 27,629 | 246 | 26,457 | 24,774 | 24,032 | 742 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 250 | 302 | 302 | - | 1,163 | 1,852 | 1,852 | - |
| ஏனைய வருமானம் | 50,877 | 51,178 | 51,178 | - | 31,296 | 74,513 | 44,663 | 29,850 |
| மொத்தம் | 82,400 | 90,900 | 90,872 | 2,829 | 71,712 | 118,929 | 82,706 | 31,123 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மதிப்பீட்டை 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் செய்து கொள்ள வேண்டிய போதும் பிரதேச சபையினால் வீதவரி மதிப்பீட்டை இறுதியாக செய்திருந்தது 2015 ஆண்டிலாகும். 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பீடு செய்யாததால் ஆதனங்களின் தற்போதைய நிலைமை மாற்றமடைவதன் மீது திட்டவட்டமாக கணக்கிட முடியாக வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | அவானிப்புடன் இணங்குகிறேன். | வரி மதிப்பீட்டை கால ரீதியாக மேற்கொண்டு வருமானம் ஈட்டிக் கொள்ள நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ரூபா 4,766,916 ஆன நிலவை வீதவரி மீதியொன்று காணப்பட்டது. | - மேற்படி - | நிலுவை வீதவரியை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) | பொது வியாபாரக் கட்டிடத் தொகுதியில், வியாபாரக் கட்டிடத் தொகுதியில் மற்றும் பேருந்து தரிப்பிடத்தில் 01 கடையறை வீதம் 03 கடையறைகள் குத்தகை வழங்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | கடையறைகளை டென்டர் ஊடாக வழங்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலவை கடை வாடகை வருமானம் 149 கடைகளிலிருந்து ரூபா 344,086 காணப்பட்டது. | - மேற்படி - | நிலுவை கடை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ரூபா 576,272 ஆன நிலுவை டென்டர் வாடகை சபைக்கு அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | - மேற்படி - | நிலுவை டென்டர் வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கடந்த 05 ஆண்டுகளில் பெற்றுக் கொண்ட கட்டிட அனுமதிப் பத்திரங்களிற்கு ஒப்பாக இணக்கப்பாட்டு சான்றிதழ் பெற்றுக் கொள்ளும் முன்னேற்றம் குறைந்த நிலையில் காணப்பட்டது. சபையினால் இணக்கப்பாட்டு சான்றிதழ் பெற்றுக் கொள்வது தொடர்பாக பின்னூட்டல் செய்யாததால் சபைக்கு அறவிட வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | அவானிப்புடன் இணங்குகிறேன். | வருமானத்தை உரியவாறு அறவிட வேண்டும். |
| (எ) | மாகாண சபை பிரதான செயலாளரிடம் இருந்து மற்றும் ஏனைய அலுவலர்களிடமிருந்து 2023 திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 10,364,213 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 26,880,000 தொகை கிடைக்க வேண்டியதாக காணப்பட்டது. | - மேற்படி - | பணத்தை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி பெறவேண்டிய 10 கணக்குகளின் பெறுமதி ரூபா 57,370,567 ஆனது. | அவானிப்புடன் இணங்குகிறேன். | அறவிட வேண்டிய மீதிகளை விரைவில் அறவிட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி செலுத்த வேண்டிய 09 கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 29,555,936 ஆனது. | - மேற்படி - | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க வேண்டும் |
| (இ) | ஓய்வு பெற்ற மற்றும் கடமையை விட்டுச் சென்ற 07 ஊழியர்களிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத் தொகை ரூபா 560,069 தொகை அறிவிட வேண்டிய கடன் மீதி காணப்பட்டது. | அவானிப்புடன் இணங்குகிறேன். | ஊழியர் கடனை உரியவாறு அறவிட வேண்டும். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியன்று சபையின் அங்கீகார ஆளணியினரில் 12 வெற்றிடங்கள் மற்றும் ஒரு மிகை ஆளணியினர் 25 உமானது. | அவானிப்புடன் இணங்குகிறேன். | ஆளணியினர் தேவைப்பாட்டை கால ரீதியாக மீளாய்வு செய்து கொள்ள வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான அம்பகம்மன உப அலுவலக வளவு 13 வருட காலமாக மற்றும் பழைய சபை அலுவலகம் கட்டிடம் 2 வருடங்களாக பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | அவானிப்புடன் இணங்குகிறேன். | செயலற்ற சொத்துக்களை பயன்படுத்த நடடிக்கை எடுக்கக வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டின் போது குழாய் கிணறு திருத்தத்திற்கு பயன்படுத்தும் உபகரணத் தொகுதியொன்று ரூபா 25,185 இற்கு பெற்றிருந்த போதும் அந்த உபகரணத் தொகுதி குறை பயன்பாட்டுடன் நிலவியது. | - மேற்படி - | - மேற்படி - |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதி விளக்கு தூண்கள் முறையாக இலக்கமிடப்பட்டு ஆவணப்படுத்தி இருக்காததுடன் அனைத்தையும் தரவுத் தொகுதிக்குள் உள்ளீடு செய்திருக்கவில்லை. | அவானிப்புடன் இணங்குகிறேன். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளாதுவரையாக பேண வேண்டும். |
| (ஆ) | உபகரணங்கள் 36 வகைகளிற்குரிய 141 உருப்படிகளின் பெறுமதி மற்றும் சபைக்கு சொந்தமான 05 காணிகளின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் இனங்கண்டிருக்கவில்லை. | அவானிப்புடன் இணங்குகிறேன். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளாதுவரையாக பேண வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான குழாய் கிணறுகள் அமைந்துள்ள இடம், குழாய் கிணறுகளின் செயற்பாடு, பராமரிப்பு மேற்கொள்ளல் மற்றும் உரிமை தொடர்பாக தகவல்கள் நாளாதுவரையாக நடாத்திச் சென்றிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | சபையினால் பயன்படுத்தப்படும் தம்பதெணிய வாராந்த சந்தை மற்றும் தம்பதெணிய முன்பள்ளி மற்றும் வாசிகசாலை அமைந்துள்ள காணி, தம்பதெணிய பங்களாவத்த ஏலவிற்பனை காணி, தெளிகனு அங்க கிளினிக் நிலைய காணி, ஒளியதெணிய திண்மக் கழிவு நிலையம் மற்றும் மயானம் அமைந்துள்ள காணி, கப்துரா காணிப் பகுதி இலக்கம் 12, அம்பகம்மன உப | அவானிப்புடன் இணங்குகிறேன். | காணிகளின் உரிமைகளை முறையாக சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அலுவலகம் அமைந்துள்ள காணி மற்றும் பிரதேச சபை பழைய அலுவலக கட்டிடம் ஆகிய காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை சபைக்கு சுவீகரித்திருக்கவில்லை.

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாலுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருமான விடயங்கள் 04 இல் மதிப்பிட்ட மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே 27 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான விலகமும் 04 செலவின மதிப்பிட்ட ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே 47 சதவீதத்திலும் கூடிய விலகளும் காணப்பட்டது. | அவதானிப்புடன் இணங்குகிறேன். | வருட ஆரம்ப வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பில் எதிர்வுகூறி வரவு செலவு திட்டத்தை தயாரிக்க வேண்டும் |